செய்யலாம் என்ற வகையில் ஒப்பந்தத்தின் ஷரத்து ஒன்று இருக்கிறது என்பது உண்மையா? அப்படியிருந்தால், அதை எப்படி நமது ராஜ்யத்திலே ஏற்றுக்கொண்டார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER : Question No. 71 is postponed at the request of the Government.

ஹரிஜன நல இலாகாவில் பணி புரியும் துணை சேவக்குகள்

*72 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன இலாகாவில் சென்ற ஆண்டு வரை எத்தனை டிப்டி சேவக்குகள் பணியாற்றி வந்தனர், ஜில்லாவாரியாக?

(இ) அவர்களில் எத்தனை பேர் இப்போது வேலை செய்து வருகின்றனர்?

(உ) அவர்களுக்கு இப்போது என்ன பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது?

(எ) அவர்களின் அலுவல் விவரம் என்ன?

(ஐ) ஹோட்டல்களில் தீண்டாமை பாராட்டப்படுவதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறதா?

(ஒ) இல்லையெனில், அவர்களுக்கு அந்த அதிகாரம் வழங்க உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன் (அ) முதல் (ஒ) வரை : சபைமுன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்தக் குழுவிற்கு அவகாசம் இருப்பதன் காரணமாக, நிலங்களுக்குரிய ஏ.பி. லிஸ்ட் என்பதைத் தயாரிக்கக்கூடிய வேலையை இந்தக் குழுவிற்கு ஒப்படைப்பது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : பிரசாரத்திற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலையை அவர்கள் சரியாகச் செய்ய வேண்டும். அவர்களுக்கு இதர வேலைகளைக் கொடுத்தால் சரியாகச் செய்யமாட்டார்கள். கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற வேலையை அரிசன நல இலாக்கா சம்பந்தப்பட்ட அன்பர்களும் மற்றவர்களும் பார்க்கக் கூடும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இவ் விலாகாவில் பணி செய்கின்ற டெபுடி சேவக்குகளுக்கு மாதம் எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது? அவர்களுக்கு ஏதேனும் விசேஷ அலவன்ஸ், கிராக்கிப்படி கொடுக்கப்படுகிறதா என்று அறியலாமா?

---

[a] 441–442-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

4th August 1966]

கனம் திரு. பூ. கக்கன் : முன்னால் எவ்வளவு சம்பளம் கொடுக்கப் பட்டதோ அதுவேதான் இப்போதும் கொடுக்கப்படுகிறது. விசேஷமாக ஒன்றும் கொடுக்கவில்லை.

திரு. சோ. ஆறுமுகம் : டெபுடி சேவக்குகள் எந்தத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன சேவையில் எவ்வளவு தூரம் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்று பார்க்க வேண்டும், நன்றாகப் பாடத் தெரியுமா என்றும் பார்க்க வேண்டும். பிரசாரம் செய்வதற்குப் பாட்டும் அவசியமாக இருக்கிறது.

***73 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஹரிஜன நல இலாகாவில் பணி புரியும் டிப்டி சேவக்கு களின் தற்போதைய சம்பளம், படித்தொகை என்ன?

(இ) அவைகளை உயர்த்தும் உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) சம்பளம்—மாதம் ரூ. 80 (இது நிலைச் சம்பளமாகும்).

அகவிலைப்படி—இவர்களுக்கு இல்லை.

பயணப்படி—வெளியூர்களில் உள்ளவர்களுக்கு, தமிழ்நாடு பயணப்படி விதிகளுக்கிணங்க பயணப்படி அனுமதிக்கப்படுகிறது. சென்னை மாநகரில் உள்ளவர்களுக்கு வண்டிச் செலவிற்காக மாதம் ரூ. 16 தரப்படுகிறது.

(இ) இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போதைய ஊதியத்தைப் பெற்றுக் கொண்டே கூட இத்தகைய ஊழியர்கள் தங்கள் வேலை களுக்கு இடைஞ்சல் இல்லாத அளவுக்கு முன்னால் விதித்திருந்த பணிகளைச் செய்ய முடியும் என்பதாக சம்பந்தப்பட்ட ஜில்லா ஹரிஜன இலாக்கா அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அத்தகைய பணிகளையும் அவர்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

MR. SPEAKER : It is a hypothetical question.

திரு. சா. கணேசன் : இந்த டெபுடி சேவக்குகளுக்குக் கல்வி அடிப்படையில் குறைந்த பட்ச தகுதி இன்னவாவது இருக்க வேண்டுமென்று வரையறை செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி யானால் அந்த வரையறை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பொதுவாக எஸ்.எஸ்.எல்.சி. படித் திருக்க வேண்டுமென்று இருக்கிறது. சில சமயங்களில் பிரசாரத்தில் நல்ல திறமை உடையவர்களாக இருந்தால் அவர் களுக்கு விதி விலக்குக் கொடுக்கவும் கொடுக்கிறோம்.